**1)** சரியான தொடர் எது?

A) ஒரு ஊர் ஓர் கடல்

B) ஒரு ஊர் ஒரு கடல்

C) ஓர் ஊர் ஓர் கடல்

D) ஓர் ஊர் ஒரு கடல்

E) விடை தெரியவில்லை

**2)** "குறிஞ்சி நகர் எங்கே இருக்கிறது? என்றக் கேள்விக்கு அதோ அங்கே இருக்கிறது" என்று விடையளிப்பது

A) நேர்விடை

B) மறைய்டை

C) சுட்டுவிடை

D) ஏவல் விடை

E) விடை தெரியவில்லை

**3)** "புலிக்குட்டி" என்பதில் உள்ள வழுவை நீக்குக.

A) புலிப்பறழ்

B) புலிக்கன்று

C) புலிக்குருளை

D) புலிப்பிள்ளை

E) விடை தெரியவில்லை

**4)** கல்லாதவர் - இலக்கணக்குறிப்பு அறிக

A) வினையாலனையும் பெயர்

B) எதிர்மறை வினையாலனையும் பெயர்

C) குறிப்பு வினையெச்சம்

D) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

E) விடை தெரியவில்லை

**5)** பின்வரும் குறளில் பயின்றுவந்துள்ள எதுகை வகையை கண்டறி.

**"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**

**பற்றுக பற்று விடற்கு"**

A) பொழிப்பு எதுகை

B) கூழை எதுகை

C) மேற்கதுவாய் எதுகை

D) கீழ்க்கதுவாய் எதுகை

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**6)** "சுவற்றில் படம் வரைந்தார்கள் குழந்தை" - தொடரில் உள்ள பிழைகளை நீக்கி சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க

A) குழந்தை சுவற்றில் படம் வரைந்தது

B) குழந்தைகள் சுவற்றில் படம் வரைந்தார்கள்

C) குழந்தைகள் சுவற்றில் படங்களை வரைந்தார்கள்

D) குழந்தை சுவரில் படம் வரைந்தது

E) விடை தெரியவில்லை

**7)** மிசை என்ற சொல்லின் எதிர்ச்சொல்

A) மேலே

B) கீழே

C) அருகில்

D) தொலைவில்

E) விடை தெரியவில்லை

**8)** ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க:

A) மலர்கள் மனம் வீசின

B) மலர்கள் மணம் வீசின

C) மளர்கள் மனம் வீசின

D) மலர்கள் மணம் வீசிந

E) விடை தெரியவில்லை

**9)** "பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்" என்றத் தொடரில் பயின்றுவந்துள்ள மோனை வகை

A) கூழை மோனை

B) இணை மோனை

C) பொழிப்பு மோனை

D) ஒரூஉ மோனை

E) விடை தெரியவில்லை

**10)** இலக்கணக்குறிப்பு அறிக: குரைக்க

A) பெயரெச்சம்

B) தொழிற்பெயர்

C) வியங்கோள் வினைமுற்று

D) வினையாலணையும் பெயர்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**11)** பிறவினைத் தொடரைக் குறிக்கும் வாக்கியத்தைக் கண்டறிக.

A) மகிழன் நேற்று வந்தான்

B) கவிதா உரை படித்தாள்

C) குணாளன் நேற்று வருவித்தான்

D) உரை பாரதியால் படிக்கப்பட்டது.

E) விடை தெரியவில்லை

**12)** வழுவற்ற தொடர் எது?

A) அதைச் செய்தது நான் அன்று

B) அதைச் செய்தது நான் அல்லேன்

C) அதைச் செய்தது நான் அல்ல

D) அதைச் செய்தது நான் அல்லர்

E) விடை தெரியவில்லை

**13)** "வீடு கட்டியாயிற்று" - என்பது எவ்வகை வாக்கியம் ஆகும்?

A) தன்வினை

B) பிறவினை

C) செய்வினை

D) செயப்பாட்டு வினை

E) விடை தெரியவில்லை

**14)** தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன - இது எவ்வகைத் தொடர்?

A) வினாத்தொடர்

B) கட்டளைத்தொடர்

C) செய்தித்தொடர்

D) உணர்ச்சித்தொடர்

E) விடை தெரியவில்லை

**15)** எதிர்மறைச் சொற்களில் பொருந்தாதது எது?

A) தன்மை ஒருமை - நான் அல்ல

B) முன்னிலை ஒருமை - நீ அல்லை

C) படர்க்கை ஆண்பால் - அவன் அல்லன்

D) படர்க்கை ஒன்றன்பால் - அஃது அன்று

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**16)** மரபுப் பிழையற்ற தொடர் எது?

A) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்

B) நேற்று தென்றல் காற்று அடித்தது

C) கொடியில் உள்ள மலரைக் கொய்து வா

D) தென்னை மட்டையிலிருந்து நார் எடுத்தார்

E) விடை தெரியவில்லை

**17)** "பொலம்" - என்ற சொல்லின் பொருள் என்ன?

A) காடு

B) அழகு

C) குழல்

D) தானியக்குவியல்

E) விடை தெரியவில்லை

**18)** நவிலுதல் என்றால் என்ன?

A) நழுவுதல்

B) சொல்லுதல்

C) கேட்டல்

D) படித்தல்

E) விடை தெரியவில்லை

**19)** பொருந்தாதது எது?

A) தோசை வைக்கப்பட்டது - செயப்பாட்டுவினைத் தொடர்

B) குமார் நேற்று வந்தான் - தன்வினைத் தொடர்

C) பாடம் கவிதாவால் படிக்கப்பட்டது - செயப்பாட்டு வினைத்தொடர்

D) கோவலன் கொலையுண்டான் - செய்வினைத் தொடர்

E) விடை தெரியவில்லை

**20)** மயங்கொலிப் பிழையற்ற தொடரைக் காண்க

A) பேச்சுமொழி சிறப்பாக அமையக் குறல் ஏற்றத்தால்வு அவசியம்

B) பேச்சுமொழி சிரப்பாக அமையக் குரல் ஏற்றத்தாள்வு அவசியம்

C) பேச்சுமொழி சிறப்பாக அமையக் குரல் ஏற்றத்தாழ்வு அவசியம்

D) பேச்சுமொழி சிறப்பாக அமையக் குரல் ஏற்றத்தாள்வு அவசியம்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**21)** அகர வரிசைப்படி அமைந்தது எது?

A) மனத்துயர், மீமிசை, முந்நீர், மேடுபள்ளம், மொழிபெயர்ப்பு

B) மனத்துயர், முந்நீர், மீமிசை, மேடுபள்ளம், மொழிபெயர்ப்பு

C) மனத்துயர், முந்நீர், மீமிசை, மொழிபெயர்ப்பு, மேடுபள்ளம்

D) மனத்துயர், மீமிசை, முந்நீர், மொழிபெயர்ப்பு, மேடுபள்ளம்

E) விடை தெரியவில்லை

**22)** பொருந்தா இணை எது?

A) சிலம்பு - காலில் அணிவது

B) சூழி - நெற்றியில் அணிவது

C) குழை - காதில் அணிவது

D) அரைநாண் - இடையில் அணிவது

E) விடை தெரியவில்லை

**23)** "குன்றேறி யானைப்போர் கண்டற்றால்" - என்ற வமை கூறும் பொருள்?

A) பயம்

B) பாதுகாப்பு

C) மலை

D) சண்டை

E) விடை தெரியவில்லை

**24)** வேர் சொல் தருக: பண்படுதல்

A) பண்

B) பண்பாடு

C) பண்படு

D) பண்பு

E) விடை தெரியவில்லை

**25)** ஒலி மரபுகளில் பொருந்தாதது?

A) குதிரை - கனைக்கும்

B) எருது - எக்காளமிடும்

C) குரங்கு - கீச்சிடும்

D) வண்டு முரலும்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**26)** மரபுப் பிழையற்றத் தொடரைக் காண்க

A) தென்னந்தோப்பு

B) தென்னந்தோட்டம்

C) தென்னங்காடு

D) தென்னைவயல்

E) விடை தெரியவில்லை

**27)** கொடு என்ற வேர்ச்சொல்லின் எதிர்மறைத் தொழிற்பெயர்

A) கொடுக்காமல்

B) கொடுக்காத

C) கொடுக்காதவர்

D) கொடுக்காமை

E) விடை தெரியவில்லை

**28)** "அத்தி பூத்தார் போல" - உவமை கூறும் பொருள் தெரிக

A) வெகுமானம்

B) செயற்கரிய செயல்

C) அரிய நிகழ்வு

D) துன்பச் செயல்

E) விடை தெரியவில்லை

**29)** சிலப்பதிகாரம் காட்டும் "பல்நிண விலைஞர்" யார்?

A) வெற்றிலை விற்பவர்கள்

B) நறுமணப் பொருட்களை விற்பவர்

C) பல்வகை இறைச்சிகளை விலைகூறி விற்பவர்கள்

D) எண்ணெய் விற்போர்

E) விடை தெரியவில்லை

**30)** அப்துல் நேற்று வந்தான் என்பது எந்த தொடரைக் குறிக்கும்?

A) தன்வினைத் தொடர்

B) பிறவினைத் தொடர்

C) செய்வினைத் தொடர்

D) செயப்பாட்டுவினைத் தொடர்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**31)** பொருந்தாத இணை எது?

A) கிழக்கு - கொண்டல்

B) மேற்கு - கோடை

C) வடக்கு - குணக்கு

D) தெற்கு - தென்றல்

E) விடை தெரியவில்லை

**32)** காய்களின் மரபுப் பெயர்களில் பிழையற்றது?

A) வாழை

B) கத்தரிப்பிஞ்சு

C) மாம்பிஞ்சு

D) அவரைக்காய்

E) விடை தெரியவில்லை

**33)** பொருந்தாப் பொருள் எது?

A) அழை - கூப்பிடு

B) கரை - துணியில் படுவது

C) குழவி - அம்மிக் கல்

D) வாளை - ஒரு மீன் வகை

E) விடை தெரியவில்லை

**34)** பின்வரும் எங்கு வல்லினம் மிகாது?

A) அ, இ என்னும் சுட்டெழுத்துகளுக்குப் பின்

B) அந்த, இந்த என்னும் சுட்டுப் பெயர்களின் பின்

C) எ என்னும் வினா எழுத்தின் பின்

D) எண்ணுப்பெயர்களுக்குப் பின்

E) விடை தெரியவில்லை

**35)** பிரித்து எழுதுக: கண்டெடுக்கப்பட்டுள்ளன

A) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன

B) கண்டு + எடுக்கப் + பட்டுள்ளன

C) கண்டெடுக்க + பட்டு + உள்ளன

D) கண் + டெடுக்க + பட்டு + உள்ளன

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**36)** உழை - என்பதன் பொருள்?

A) ஒரு வகை குரங்கு

B) ஒரு வகை பன்றி

C) ஒரு வகை மான்

D) ஒரு வகை எருது

E) விடை தெரியவில்லை

**37)** முத்துடைத்தாமம் - இலக்கணக்குறிப்பு

A) இரண்டாம் வேற்றுமைத் தொகை

B) மூன்றாம் வேற்றுமைத் தொகை

C) நான்காம் வேற்றுமைத் தொகை

D) ஐந்தாம் வேற்றுமைத் தொகை

E) விடை தெரியவில்லை

**38)** "வில்வாள்" - இலக்கணக்குறிப்பு தருக.

A) முற்றும்மை B) உம்மைத்தொகை C) உவமைத்தொகை D) எண்ணும்மை

E) விடை தெரியவில்லை

**39)** அறிவார், வல்லார் - இலக்கணக்குறிப்பு தருக.

A) வினையாலணையும் பெயர்கள்

B) எதிர்மறைத் தொழிற்பெயர்கள்

C) பெயரெச்சங்கள்

D) உருவகங்கள்

E) விடை தெரியவில்லை

**40)** பொருத்துக:

(i) இந்திரன் - 1) அரவிந்தன்

(ii) ஆத்மாநாம் - 2) இராசேந்திரன்

(iii) அழகிய பெரியவன் - 3) மதுசூதனன்

(iv) பிரமிள் - 4) பசுவய்யா

(v) சுந்தரராமசாமி - 5) சிவராமலிங்கம்

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 2 | 3 | 1 | 5 | 4 |
| C) | 3 | 1 | 2 | 5 | 4 |
| D) | 3 | 1 | 5 | 2 | 4 |

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**41)** பொருத்துக:

| இதழாசிரியர் | இதழ் |
|---|---|
| (i) ஆத்மாநாம் | - 1) எழுத்து |
| (ii) மீரா | - 2) கொல்லிப்பாவை |
| (iii) சி.சு.செல்லப்பா | - 3) கிழக்கு வாசல் உதயம் |
| (iv) இராஜமார்த்தாண்டன் | - 4) கவி |
| (v) உத்தம சோழன் | - 5) ழ |

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 5 | 4 |
| B) | 5 | 4 | 1 | 3 | 2 |
| C) | 5 | 4 | 1 | 2 | 3 |
| D) | 4 | 5 | 1 | 2 | 3 |

E) விடை தெரியவில்லை

**42)** பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் என்ன?

A) சண்முகசுந்தரம்

B) இராதாகிருஷ்ணன்

C) துரை. மாணிக்கம்

D) ரெங்கசாமி

E) விடை தெரியவில்லை

**43)** கோடையும் வசந்தமும் என்ற நூலின் ஆசிரியர்?

A) அழகிய பெரியவன்

B) கோமகள்

C) இராஜமார்த்தாண்டன்

D) கவிஞர் மீரா

E) விடை தெரியவில்லை

**44)** மலைபடுகடாம் எத்தனை அடிகளால் ஆனது?

A) 599

B) 583

C) 103

D) 782

E) விடை தெரியவில்லை

**45)** பரிபாடலின் 70 பாடல்களில், கிடைக்கப்பட்ட பாடல்களின் எண்ணிக்கை என்ன?

A) 24

B) 64

C) 44

D) 54

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**46)** சீறாப்புராணத்தின் உரையாசிரியர்?

A) பனி அகமது மரைக்காயர்
B) செய்குதம்பிப் பாவலர்
C) சி.வை.தாமோதரனார்
D) பேராசிரியர்
E) விடை தெரியவில்லை

**47)** ஐங்குறுநூறு பாடிய புலவர்களைப் பொருத்துக:

1. குறிஞ்சி - அ) ஓரம்போகியார்
2. முல்லை - ஆ) கபிலர்
3. மருதம் - இ) பேயனார்
4. நெய்தல் - ஈ) ஓதலாந்தையார்
5. பாலை - உ) அம்மூவனார்

A) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-உ, 5-அ
B) 1-ஆ, 2-இ, 3-அ, 4-உ, 5-ஈ
C) 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-உ, 5-இ
D) 1-உ, 2-இ, 3-ஈ, 4-ஆ, 5-அ
E) விடை தெரியவில்லை

**48)** தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை. - என்னும் கூற்று யாருடையது?

A) இரசூல் கம்சதேவ்
B) மார்க்சிமர்
C) வால்ட் விட்மன்
D) பாப்லோ நெரூதா
E) விடை தெரியவில்லை

**49)** கலிங்கத்துப்பரணியை "தென்தமிழ் தெய்வப்பரணி" என்று புகழ்ந்தவர்?

A) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்
B) ஒட்டக்கூத்தர்
C) பலபட்டைச்சொக்கநாத புலவர்
D) அறிஞர் அண்ணா
E) விடை தெரியவில்லை

**50)** தகப்பன் கொடி என்றப் புதினத்திற்காக தமிழக அரசு விருதுபெற்றவர்?

A) வெ.இறையன்பு
B) புவியரசு
C) தேன்மழை
D) அழகிய பெரியவன்
E) விடை தெரியவில்லை

**51)** உழத்திப்பாட்டு என்று அழைக்கப்படுவது?

A) தூது

B) உலா

C) கலம்பகம்

D) பள்ளு

E) விடை தெரியவில்லை

**52)** மூன்றடி சிற்றெல்லையையும் ஆறடி பேரெல்லையையும் கொண்ட நூல் எது?

A) குறுந்தொகை

B) ஐங்குறுநூறு

C) நற்றிணை

D) அகநானூறு

E) விடை தெரியவில்லை

**53)** குறுந்தொகையில் கடவுள் வாழ்த்து நீங்கலாக உள்ள பாடல்களின் எண்ணிக்கை?

A) 400 B) 500 C) 401 D) 399

E) விடை தெரியவில்லை

**54)** தமிழில் எழுதப்பட்ட முதலாவது தருக்க நூல்?

A) குண்டலகேசி

B) நீலகேசி

C) யசோதரகாவியம்

D) சீவகசிந்தாமணி

E) விடை தெரியவில்லை

**55)** பொருத்துக:

| அடை | எட்டுத்தொகை நூல் |
|---|---|
| (i) நல் | - 1) குறுந்தொகை |
| (ii) நல்ல | - 2) நற்றிணை |
| (iii) ஒத்த | - 3) பதிற்றுப்பத்து |
| (iv) ஓங்கு | - 4) கலித்தொகை |
| (v) கற்றறிந்தார் ஏத்தும் | - 5) பரிபாடல் |

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 | 5 |
| B) | 2 | 3 | 4 | 5 | 1 |
| C) | 2 | 3 | 5 | 1 | 4 |
| D) | 2 | 1 | 3 | 5 | 4 |

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**56)** தமிழில் வந்த முதல் அறிவியல் இதழ்?

A) அமுதசுரபி

B) கலைமகள்

C) தமிழர் நேசன்

D) பிரசண்ட விகடன்

E) விடை தெரியவில்லை

**57)** கம்பரின் காலம்?

A) ஒன்பதாம் நூற்றாண்டு

B) பத்தாம் நூற்றாண்டு

C) பதினொறாம் நூற்றாண்டு

D) பன்னிரண்டாம் நூற்றாண்டு

E) விடை தெரியவில்லை

**58)** "வசனநடை கைவந்த வல்லாளர்" எனப் புகழப்படுபவர்?

A) சி.வை.தாமோதரனார்

B) ஆறுமுக நாவலர்

C) பரலி நெல்லையப்பர்

D) உ.வே.சாமிநாதர்

E) விடை தெரியவில்லை

**59)** களவழி நாற்பது நூலைத் தழுவி பரிதிமாற் கலைஞரால் இயற்றப்பட்ட நூல்?

A) ரூபாவதி

B) கலாவதி

C) மான விஜயம்

D) வணிகபுரத்து வீரன்

E) விடை தெரியவில்லை

**60)** திருவருட்பா எத்தனை திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது?

A) 4

B) 5

C) 6

D) 8

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**61)** 1997இல் சாகித்ய அகாதெமி விருதுபெற்ற தோப்பில் முகம்மது மீரானின் புதினம்?

A) துறைமுகம்

B) ஒரு குட்டித்தீவின் வரைபடம்

C) கூனன் தோப்பு

D) சாய்வு நாற்காலி

E) விடை தெரியவில்லை

**62)** 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் நூலை இயற்றியவர்?

A) ந.பிச்சமூர்த்தி

B) ஞானக்கூத்தன்

C) வல்லிக்கண்ணன்

D) வெ.இறையன்பு

E) விடை தெரியவில்லை

**63)** "காலின் ஏழடிப் பின் சென்று" என்று குறிப்பிடும் நூல்?

A) பொருநராற்றுப்படை

B) சிறுபாணாற்றுப்படை

C) கூத்தராற்றுப்படை

D) பெரும்பாணாற்றுப்படை

E) விடை தெரியவில்லை

**64)** பொருள் வேறுபாடு அறிந்து சரியான விடையைத் தேர்க:

| | புல் | - | புள் |
|---|---|---|---|
| A) | பரவை | - | தாவரம் |
| B) | தாவரம் | - | பரவை |
| C) | தாவரம் | - | பறவை |
| D) | பறவை | - | தாவரம் |

E) விடை தெரியவில்லை

**65)** புறநானூற்றை முதன்முதலில் 1894 ஆம் ஆண்டு முதன் முதலாக பதிப்பித்து வெளியிட்டவர் யார்?

A) சி.வை.தாமோதரம்பிள்ளை

B) நச்சினார்க்கினியர்

C) தஞ்சை ஞானபிரகாசர்

D) உ.வே.சாமிநாதர்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**66)** மூதுரையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை என்ன?

A) 30

B) 31

C) 40

D) 41

E) விடை தெரியவில்லை

**67)** "தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்" என்ற நூலுக்காக தமிழக அரசின் முதற்பரிசு பெற்றவர்?

A) மயிலை சீனி. வேங்கடசாமி

B) மா.இராசமாணிக்கனார்

C) வ.சு.ப.மாணிக்கம்

D) சோமசுந்தர பாரதியார்

E) விடை தெரியவில்லை

**68)** தமிழின் சிறப்புகளைப் பற்றி ஆய்வுகள் பல செய்தமையால் 'தமிழ் இமயம்' என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்டவர்

A) வ.சு.ப. மாணிக்கம்

B) மா. இராசமாணிக்கனார்

C) சி.மணி

D) சோமசுந்தர பாரதியார்

E) விடை தெரியவில்லை

**69)** நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி / வஞ்சனை சொல்வாரடீ! - கிளியே வாய்ச்சொல்லில் வீரரடி. என்ற வரிகள் யாருடையது?

A) பாரதியார்

B) பாரதிதாசன்

C) சுரதா

D) தாராபாரதி

E) விடை தெரியவில்லை

**70)** திருக்குறளை பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்தவர்களில் பொருந்தாத இணை எது?

A) கிரேக்கம் - டாக்டர் கிரௌல்

B) இலத்தின் - வீரமாமுனிவர்

C) ஆங்கிலம் - ஜி.யு. போப்

D) பிரெஞ்சு - ஏரியல்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**71)** ஆசாரக்கோவை எத்தனைப் பாடல்களைக் கொண்டது?

A) 70 வெண்பாக்கள்

B) 100 வெண்பாக்கள்

C) 120 வெண்பாக்கள்

D) 50 வெண்பாக்கள்

E) விடை தெரியவில்லை

**72)** காட்டாறு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.

A) காடு + ஆறு

B) காட்டு + ஆறு

C) காட் + ஆறு

D) காட் + டாறு

E) விடை தெரியவில்லை

**73)** ஈரோடு தமிழன்பனின் "வணக்கம் வள்ளுவ" என்னும் நூல் சாகித்திய அகாதமி விருதுபெற்ற ஆண்டு?

A) 2001

B) 2002

C) 2003

D) 2004

E) விடை தெரியவில்லை

**74)** "உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர் / அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத் / தமிழ்யர் உண்டாலும் இலரே; முனிவிலர்!" எனத்துவங்கும் பாடல் இடம்பெறும் நூல்?

A) அகநானூறு

B) பதிற்றுப்பத்து

C) குறுந்தொகை

D) புறநானூறு

E) விடை தெரியவில்லை

**75)** வெண்பா வடிவப் பாடல்கள் கிரேக்கத்தில் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

A) நாவெல்லா

B) இனிகியா

C) பாய்யியோனா

D) சாப்போ

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**76)** விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் எது?

A) மணிமேகலை B) சீவகசிந்தாமணி C) வளையாபதி D) குண்டலகேசி

E) விடை தெரியவில்லை

**77)** "புல்லின் இதழ்கள்" என்ற நூலை இயற்றியவர் யார்?

A) மல்லார்மே

B) டி.எஸ். எலியட்

C) வால்ட் விட்மன்

D) பாப்லோ நெரூடா

E) விடை தெரியவில்லை

**78)** செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர் யார்?

A) தேவநேயப் பாவாணர்

B) இரா.இளங்குமாரனார்

C) பாவலரேறு பெருஞ்சித்திரனார்

D) பன்மொழிப்புலவர் க.அப்பாதுரையார்

E) விடை தெரியவில்லை

**79)** உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே. மாநாட்டுக்குரிய அம்முதல் மொழி தமிழே! - என்றவர் யார்?

A) தேவநேயப் பாவாணர்

B) இரா. இளங்குமாரனார்

C) தனிநாயகம் அடிகள்

D) க.அப்பாதுரையார்

E) விடை தெரியவில்லை

**80)** பொருத்துக:

1) குறிஞ்சி - அ) வலியிழந்த யானை

2) முல்லை - ஆ) முதலை, சுறா

3) மருதம் - இ) முயல், மான், புலி

4) நெய்தல் - ஈ) எருமை, நீர்நாய்

5) பாலை - உ) புலி, கரடி, சிங்கம்

A) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-உ, 5-அ

B) 1-அ, 2-இ, 3-ஈ, 4-உ, 5-ஆ

C) 1-இ, 2-ஈ, 3-ஆ, 4-உ, 5-அ

D) 1-உ, 2-இ, 3-ஈ, 4-ஆ, 5-அ

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**81)** கடல் நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி - என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) நற்றிணை

B) பரிபாடல்

C) கார் நாற்பது

D) திருப்பாவை

E) விடை தெரியவில்லை

**82)** யாருடைய ஆக்கமானது தானே வழிகேட்டுக்கொண்டு செல்லும்?

A) குன்றாத அருளுடையவன்

B) பெரும் பண்புடையவன்

C) அளவில்லா அன்புடையவன்

D) தளராத ஊக்கமுடையவன்

E) விடை தெரியவில்லை

**83)** தாயுமானவர் பாடல்கள் எவ்வாறு போற்றப்படுகின்றன?

A) ஆன்ற தமிழ்மறை

B) தமிழ்வேதம்

C) தமிழ் மறை வேதம்

D) மேற்கண்ட எதுவுமில்லை

E) விடை தெரியவில்லை

**84)** பொருத்துக

(i) உவமைக் கவிஞர் - 1. கல்யாணசுந்தரனார்

(ii) நாமக்கல் கவிஞர் - 2. உடுமலை நாராயணகவி

(iii) பகுத்தறிவுக் கவிராயர் - 3. சுரதா

(iv) தேசியம் காத்த செம்மல் - 4. வெ. ராமலிங்கனார்

(v) தமிழ்த் தென்றல் - 5. முத்துராமலிங்கனார்

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 3 | 4 | 2 | 5 | 1 |
| C) | 4 | 3 | 2 | 5 | 1 |
| D) | 3 | 4 | 2 | 1 | 5 |

E) விடை தெரியவில்லை

**85)** பொருந்தாத பொருள் எது?

A) வாரணம் - யானை

B) அருகாமை - பக்கத்தில்

C) சிங்காரம் - அழகு

D) கமுகு - பாக்கு

E) விடை தெரியவில்லை



ETW ACADEMY

**86)** ஓரெழுத்து ஒருமொழியில் இடம்பெறும் இரண்டு குறில் சொற்கள் எவை?

A) நொ, து

B) அ, இ

C) கொ, பு

D) உ, எ

E) விடை தெரியவில்லை

**87)** பாய்மரக்கப்பல், மீசைக்கார பூனை, பிராயாணம் உள்ளிட்ட நூல்களை எழுதியவர் யார்?

A) பாவண்ணன்

B) சே.பிருந்தா

C) யூமா வாசுகி

D) தேனரசன்

E) விடை தெரியவில்லை

**88)** வாணிதாசனின் சிறப்புப் பெயர் அல்லாதது எது?

A) கவிஞரேறு

B) தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த்

C) பாவலர்மணி

D) பண்டிதமணி

E) விடை தெரியவில்லை

**89)** கலிங்கத்துப்பரணியானது, _______ மற்றும் அவருடைய படைத்தலைவன் ______ ஆகியோர் பற்றிப் பாடப்பட்டது

A) முதலாம் குலோத்துங்கச்சோழன், விஜயரகுநாத சேதுபதி

B) முதலாம் குலோத்துங்கச்சோழன், கருணாகரத்தொண்டைமான்

C) மூன்றாம் குலோத்துங்கச்சோழன், விஜயரகுநாத சேதுபதி

D) மூன்றாம் குலோத்துங்கச்சோழன், கருணாகரத்தொண்டைமான்

E) விடை தெரியவில்லை

**90)** கொங்கு மண்டலச் சதகம் என்ற நூலை எழுதியவர் யார்?

A) கார்மேகக் கவிஞர்

B) புலவர் குழந்தை

C) நாமக்கல் கவிஞர்

D) தேனரசன்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**91)** அறிஞர் அண்ணா எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

A) தென்னகத்தின் தாகூர்

B) தென்னகத்தின் திலகர்

C) தென்னகத்தின் பெர்னாட்ஷா

D) தென்னகத்தின் மாப்பசான்

E) விடை தெரியவில்லை

**92)** குறுந்தொகை அடிவரையறை தருக.

A) 9 அடி சிற்றெல்லை 12 பேரெல்லை

B) 13 அடி சிற்றெல்லை 31 பேரெல்லை

C) 4 அடி சிற்றெல்லை 40 பேரெல்லை

D) 4 அடி சிற்றெல்லை 8 பேரெல்லை

E) விடை தெரியவில்லை

**93)** நாச்சியார் திருமொழியில் அமைந்துள்ள மொத்த பாடல்களின் எண்ணிக்கை?

A) 30

B) 45

C) 143

D) 59

E) விடை தெரியவில்லை

**94)** நற்றிணையைத் தொகுப்பித்தவன் யார்?

A) மதுரை உப்புரிகுடி கிழான் மகனாவான் உருத்திர சன்மன்

B) புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்

C) பூரிக்கோ

D) பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி

E) விடை தெரியவில்லை

**95)** சீறாப்புராணத்திலுள்ள பாடல்கள் எத்தனை?

A) 3035

B) 5216

C) 4700

D) 5027

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**96)** டி.கே.சி எந்த நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்?

A) முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம்

B) மூவருலா, சிலப்பதிகாரம்

C) சிலப்பதிகாரம், மணிமேகலை

D) காக்கைப்பாடினியம், யாப்பெருங்கலக்காரியை

E) விடை தெரியவில்லை

**97)** "களப்பிரர் காலத் தமிழகம்" என்னும் நூலின் ஆசிரியர் யார்?

A) சி.வை. தாமோதரனார்

B) இரா.பி. சேதுப்பிள்ளை

C) எஸ். வையாபுரியப்பிள்ளை

D) மயிலை சீனி. வேங்கடசாமி

E) விடை தெரியவில்லை

**98)** மனோன்மணீயம்

A) 3 காண்டங்களையும் 92 படலங்களையும் உடையது

B) 3 காண்ட்ஃபங்களையும் 36 படலங்களையும் உடையது

C) ஐந்து அங்கங்களையும் இருபது களங்களையும் உடையது

D) ஆறு காண்டங்களையும் 123 படலங்களையும் உடையது

E) விடை தெரியவில்லை

**99)** எது இல்லாதது வெறும் எலும்பும் தோலும் மட்டுமே என்பது வள்ளுவர் வாக்கு.

A) அறம்

B) அறிவு

C) ஆரோக்கியம்

D) அன்பு

E) விடை தெரியவில்லை

**100)** பொறையுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

A) பொறுமை + உடைமை

B) பொறை + உடைமை

C) பொறு + யுடைமை

D) பொறை + உடைமை

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**101)** டெல்லி சுல்தானியர் காலத்தில் திவானி ரிஸாலத் என்பர் யார்?

A) பிரதம மற்றும் நிதியமைச்சர்

B) இஸ்லாமிய சட்ட அமைச்சர்

C) வெளியுறவு அமைச்சர்

D) பாதுகாப்பு மற்றும் படைத்துறை அமைச்சர்

E) விடை தெரியவில்லை

**102)** இபின் பதூதா யார் காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்தார்?

A) கியாசுதீன் துக்ளக்

B) முகமது பின் துக்ளக்

C) பெரோஷா துக்ளக்

D) பால்பன்

E) விடை தெரியவில்லை

**103)** மெஹ்ராலி இரும்புத்தூணை அமைத்தவர்?

A) சமுத்திர குப்தர்

B) இரண்டாம் சந்திரகுப்தர்

C) குமார குப்தர்

D) முதலாம் சந்திரகுப்தர்

E) விடை தெரியவில்லை

**104)** லோத்தல் என்னும் செம்புக் கற்காலத் துறைமுகம் காணப்படும் இடம்?

A) குஜராத்

B) ராஜஸ்தான்

C) பஞ்சாப்

D) பாகிஸ்தானின் பஞ்சாப்

E) விடை தெரியவில்லை

**105)** ஷாஜகான் காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்த "தாவர்னியர்" யார்?

A) பிரஞ்சு மருத்துவர்

B) பிரெஞ்சு வைர வியாபாரி

C) ஜெர்மன் பயணி மற்றும் துணிச்சல் வீரர்

D) இங்கிலாந்து வணிகர்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**106)** அயினி அக்பரி, அக்பர் நாமா ஆகியவற்றை எழுதியவர்?

A) ராஜா தோடர்மால்

B) குல்பதான் பேகம்

C) தாராஷூகோ

D) அபுபாசல்

E) விடை தெரியவில்லை

**107)** முதல் பௌத்த மாநாடு நடைபெற்ற இடம்?

A) வைசாலி

B) பாடலிபுத்திரம்

C) இராஜகிருகம்

D) குந்தல்வனம் (காஷ்மீர்)

E) விடை தெரியவில்லை

**108)** மராத்தியர் காலத்தில், பாதுகாப்புக் கட்டணமாக மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட சௌத் வரியின் அளவு என்ன?

A) மொத்த வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு (1/3)

B) மொத்த வருமானத்தில் இரண்டில் ஒரு பங்கு (1/2)

C) மொத்த வருமானத்தில் நான்கில் ஒரு பங்கு (1/4)

D) மொத்த வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு (1/10)

D) விடை தெரியவில்லை

**109)** "முகவுரை அரசியலமிப்பின் திறவுகோல்" என்றவர் யார்?

A) எர்னஸ்ட் பர்கர்

B) பல்கிவாலா

C) கே.எம்.முன்ஷி

D) பதஞ்சலி சாஸ்திரி

E) விடை தெரியவில்லை

**110)** மாநில பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரை பதவிநீக்கம் செய்யும் அதிகாரத்தைப் பெற்றவர்

A) குடியரசுத்தலைவர்

B) ஆளுநர்

C) முதலமைச்சர்

D) உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**111)** எந்த அரசியலைப்பு உறுப்பின்படி, குடியரசுத்தலைவரால் அடிப்படை உரிமைகளை ரத்து செய்ய முடியும்?

A) 356

B) 358

C) 359

D) 370

E) விடை தெரியவில்லை

**112)** ஒரு மசோதாவை நிதி மசோதா என்று சான்றளிக்கும் அதிகாரம் பெற்றவர்?

A) நிதி அமைச்சர்

B) குடியரசுத்தலைவர்

C) சபாநாயகர்

D) மாநிலங்களவைத் தலைவர்

E) விடை தெரியவில்லை

**113)** ஆளுநர் பிறப்பித்த அவசர சட்டங்கள் தொடர்வதற்கு, அவை மாநிலச் சட்டமன்றம் மீண்டும் கூடியதிலிருந்து எவ்வளவு காலத்திற்குள் அங்கீகரிக்கப்பட வேண்டும்?

A) 6 மாதங்கள்

B) 14 நாட்கள்

C) 6 வாரங்கள்

D) 30 நாட்கள்

E) விடை தெரியவில்லை

**114)** தனிப்பட்டவரின், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும்போது, நீதிமன்றத்தை அணுகி உரிமையைப் பெறுதல், பகுதி IIIல் எப்பிரிவு ஆகும்?

A) பிரிவு 31

B) பிரிவு 30

C) பிரிவு 32

D) பிரிவு 33

**115)** மாநில அமைச்சர்கள் தனித்தனியாக யாருக்குப் பொறுப்பானவர்கள்

A) சட்டமன்றம்

B) ஆளுநர்

C) முதலமைச்சர்

D) குடியரசுத்தலைவர்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**116)** பின்வரும் எந்த அடிப்படை உரிமை சட்ட உரிமையாக மாற்றப்பட்டது?

A) சமத்துவ உர்மை

B) சுதந்திர உரிமை

C) மத உரிமை

D) சொத்துரிமை

E) விடை தெரியவில்லை

**117)** நிதிமசோதாவை எந்த அவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும்?

A) மக்களவை

B) மாநிலங்களவை

C) இரு அவைகளிலும் அறிமுகம் செய்யலாம்

D) இரு அவைகளிலும் அறிமுகப்படுத்த இயலாது

E) விடை தெரியவில்லை

**118)** தமிழகத்தில் சட்ட மேலவை கலைக்கப்பட்ட நாள் எது?

A) நவம்பர் 14, 1984

B) நவம்பர் 21, 1985

C) நவம்பர் 1, 1986

D) நவம்பர் 30, 1983

E) விடை தெரியவில்லை

**119)** ரெப்போ விகிதம் என்றால் என்ன?

A) வணிக வங்கிகள் ரிசர்வ் வங்கிக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்

B) ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்

C) அந்நிய செலாவணி மாற்று விகிதம்

D) பொருளாதார வளர்ச்சி விகிதம்

E) விடை தெரியவில்லை

**120)** பின்வருவனவற்றுள் எது நேரடி வரி அல்ல?

A) சரக்கு மற்றும் சேவை வரி

B) சொத்து வரி

C) அன்பளிப்பு / கொடை வரி

D) வருமானவரி

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**121)** வறுமை ஒழிப்பை (Garibi Hatao) நோக்கமாகக் கொண்ட ஐந்தாண்டுத் திட்டம் எது?

A) 5வது ஐந்தாண்டுத் திட்டம்

B) 7வது ஐந்தாண்டுத் திட்டம்

C) 6வது ஐந்தாண்டுத் திட்டம்

D) 8வது ஐந்தாண்டுத் திட்டம்

E) விடை தெரியவில்லை

**122)** சரக்கு மற்றும் சேவைகள் வரி நடைமுறை படுத்தப்பட்ட நாள் எது?

A) மார்ச் 30, 2017

B) ஜூலை 1, 2017

C) ஜூன் 1, 2017

D) ஆகஸ்ட் 1, 2017

E) விடை தெரியவில்லை

**123)** தேசிய ஊரக வேலைவாய்ப்புத்திட்டம் (NREP) தொடங்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1979

B) 1980

C) 1983

D) 1986

E) விடை தெரியவில்லை

**124)** நிதி ஆயோக்கின் தலைவர் யார்?

A) நிதிக்குழுவின் தலைவர்

B) நிதியமைச்சர்

C) பிரதமர்

D) குடியரசுத்தலைவர்

E) விடை தெரியவில்லை

**125)** இந்தியாவின் தேசிய பாடலான 'வந்தே மாதரம்', பக்கிம் சந்திராவின் நாவலான ____ இன் ஒரு பகுதியாகும்

A) மைலா ஆஞ்சல்

B) பிஞ்சர்

C) ஆனந்த் மத்

D) பூச்சோ பர்சாய்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**126)** சர்வோதையா திட்டம் இவரால் உருவாக்கப்பட்டது.

A) ஜெய் பிரகாஷ் நாராயணன்

B) மகாத்மா காந்தி

C) ஆச்சார்யா வினோபா பாவே

D) எம்.என்.ராய்

E) விடை தெரியவில்லை

**127)** யங் இந்தியா என்ற பத்திரிக்கையின் ஆசிரியர்?

A) மகாத்மா காந்தி

B) அம்பேத்கார்

C) குமரப்பா

D) திலகர்

E) விடை தெரியவில்லை

**128)** "பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும், இந்தியாவின் வறுமையும்" என்ற நூலை எழுதியவர்?

A) தாதாபாய் நெளரோஜி

B) ஜீ.வி.ஜோஷி

C) ஆர்.சி.தத்

D) மகாதேவ் ராணடே

E) விடை தெரியவில்லை

**129)** பெரும்புரட்சி, சம்பரான் இயக்கம், சந்தால் கிளர்ச்சி, மாப்ளா கிளர்ச்சி ஆகியவற்றுள் மிகப் பின்னதாக நடைபெற்றது?

A) சந்தால் கிளர்ச்சி

B) பெரும்புரட்சி

C) சம்பரான் இயக்கம்

D) மாப்ளா கிளர்ச்சி

E) விடை தெரியவில்லை

**130)** தீரன் சின்னமலை தூக்கிலிடப்பட்ட கோட்டை?

A) வேலூர் கோட்டை

B) சங்ககிரி கோட்டை

C) கயத்தாறு கோட்டை

D) பாளையங்கோட்டை

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**131)** சம்பத் கௌமுதி என்ற பத்திரிக்கை யாரோடு தொடர்புடையது

A) ராஜா ராம் மோகன் ராய்

B) சுவாமி தயானந்த சரஸ்வதி

C) தாதாபாய் நவ்ரோஜி

D) கேசவ் சந்திர சென்

E) விடை தெரியவில்லை

**132)** பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்ட நாள்

A) மார்ச் 23, 1931

B) மார்ச் 25, 1931

C) மார்ச் 27, 1931

D) மார்ச் 30, 1931

E) விடை தெரியவில்லை

**133)** நாமக்கல் கவிஞரின் 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' பாடல் முதன்முதலில் ஒலிக்கப்பட்ட நிகழ்வு?

A) ஒத்துழையாமை இயக்கம்

B) வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம்

C) வெள்ளையனே வெளியேறு இயக்கம்

D) 1936ஆம் ஆண்டில் காந்தியின் மதுரை பயணம்

E) விடை தெரியவில்லை

**134)** வங்காளத்தில் சதி என்னும் மூடப்பழக்கம் யார் காலத்தில் ஒழிக்கப்பட்டது?

A) வில்லியம் பெண்டிங் பிரபு

B) டல்ஹௌசி பிரபு

C) காரன்வாலிஸ் பிரபு

D) வெல்லெஸ்லி பிரபு

E) விடை தெரியவில்லை

**135)** பெரியார் திராவிட நாடு மாநாட்டைக் கூட்டிய ஆண்டு?

A) 1937

B) 1938

C) 1939

D) 1940

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**136)** "பொன்னொடு வந்து கறியொடு பெயரும்" என்ற பட்டினப்பாலை தொடரில், "கறி" என்று குறிப்பிடப்படுவது?

A) நெல்

B) மிளகாய்

C) உணவு

D) மிளகு

E) விடை தெரியவில்லை

**137)** தமிழ்நாடு சிறு தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (TANSIDCO) துவங்கப்பட்ட ஆண்டு?

A) 1960

B) 1965

C) 1970

D) 1975

E) விடை தெரியவில்லை

**138)** தமிழ்நாட்டின் குக்கிராமங்களின் மேம்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் பெயர்?

A) சுய உதவித் திட்டம்

B) தாய் திட்டம்

C) பசுமைத் திட்டம்

D) அன்னை திட்டம்

E) விடை தெரியவில்லை

**139)** 2016-17 நிதியாண்டில், தமிழ்நாட்டின் GDSP, வாங்கும் சக்தியின் அடிப்படையில் உலக அளவில் எந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமாக இருந்தது?

A) ஐக்கிய அரபு எமிரேட்

B) பங்களாதேஷ்

C) பாகிஸ்தான்

D) குவைத்

E) விடை தெரியவில்லை

**140)** ஒடுக்கப்பட்டோரின் கோவில்நுழைவுக்கு ஆதரவாகக் குரல் எழுப்புவதற்காகப் பண்டிதர் அயோத்திதாசர் நிறுவிய அமைப்பு எது?

A) திராவிட விடுதலைக் கழகம்

B) திராவிடர்க் கழகம்

C) அத்வைதானந்தா சபா

D) திராவிட மகாஜனசபை

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**141)** 2019 -20 ஆம் கல்வி ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த உயர் கல்வி சேர்க்கை விகிதம் என்ன?

A) 49%

B) 51.8%

C) 51.0%

D) 51.4%

E) விடை தெரியவில்லை

**142)** பெரியார், விடுதலை நாளிதழை துவங்கிய ஆண்டு என்ன?

A) 1933

B) 1934

C) 1935

D) 1936

E) விடை தெரியவில்லை

**143)** நீதிக்கட்சியின் முதல் மாநாடு நடைபெற்ற இடம்?

A) செங்கல்பட்டு

B) சென்னை

C) ஈரோடு

D) கோயம்புத்தூர்

E) விடை தெரியவில்லை

**144)** பொருந்தாத இணை எது?

A) மருதம் - இந்திரன்

B) நெய்தல் - வருணன்

C) முல்லை - சேயோன்

D) பாலை - கொற்றவை

E) விடை தெரியவில்லை

**145)** சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரப்பூர்வ இதழ் எது?

A) உண்மை

B) குடிஅரசு

C) திராவிட நாடு

D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**146)** வரலாற்றுச் செய்திகளை மிகுதியாகக் கொண்ட எட்டுத்தொகை நூல் எது?

A) அகநானூறு

B) கலித்தொகை

C) நற்றிணை

D) குறுந்தொகை

E) விடை தெரியவில்லை

**147)** சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன்?

A) பாரி

B) காரி

C) நல்லி

D) ஆய் அண்டிரன்

E) விடை தெரியவில்லை

**148)** பொருந்தாதது எது?

A) வரதட்சணை தடுப்பு சட்டம் - 1968

B) குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் - 2005

C) பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் சட்டம் 2013

D) குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் விதிகள் - 2006

E) விடை தெரியவில்லை

**149)** இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழகத்தின் பங்களிப்பு எவ்விடத்தில் உள்ளது?

A) முதலாவது

B) இரண்டாவது

C) ஒன்பதாவது

D) பதிமூன்றாவது

E) விடை தெரியவில்லை

**150)** பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு?

A) 1990

B) 1992

C) 1994

D) 2004

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**151)** நீதிக்கட்சியால் முதல் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை வெளியிடப்பட்ட ஆண்டு என்ன?

A) 1920, செப்டம்பர் 20

B) 1921 செப்டம்பர் 16

C) 1921 ஆகஸ்ட் 16

D) 1922 ஆகஸ்ட் 15

E) விடை தெரியவில்லை

**152)** அண்ணா அறிமுகப்படுத்திய சுயமரியாதைத் திருமணப் பாதுகாப்புச் சட்டம் என்று முதல் நடைமுறைக்கு வந்தது?

A) 1968, ஜனவரி 6

B) 1968 ஜனவரி 14

C) 1968 ஜனவரி 26

D) 1968 ஜனவரி 20

E) விடை தெரியவில்லை

**153)** நீதிக்கட்சியின் பெயரை திராவிடர் கழகம் என்று பெயர்மாற்றம் செய்வதற்கான தீர்மானத்தை கொண்டுவந்தவர் யார்?

A) பெரியார்

B) பட்டுக்கோட்டை அழகிரி

C) நாவலர் நெடுஞ்செழியன்

D) அறிஞர் அண்ணா

E) விடை தெரியவில்லை

**154)** வள்ளலார், சமரச வேத சன்மார்க்க சங்கம் எனும் அமைப்பை நிறுவிய ஆண்டு என்ன?

A) 1866

B) 1867

C) 1865

D) 1868

E) விடை தெரியவில்லை

**155)** சென்னை மாகாணத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து சட்டமேலவைக்கு தேர்தெடுக்கப்பட்ட முதல் உறுப்பினர் யார்?

A) இரட்டைமலை சீனிவாசன்

B) அயோத்திதாசர்

C) மயிலை சின்னத்தம்பி ராஜா

D) தோழர் ஜீவானந்தம்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**156)** தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் தற்போதைய பெயர்?

A) தமிழ் இணையக் கல்விக்கழகம்

B) தமிழ் இணைய நிறுவனம்

C) தமிழ் காட்சிக் கல்விக்கழகம்

D) தமிழ் காட்சி நிறுவனம்

E) விடை தெரியவில்லை

**157)** பிற அகத்திணை நூல்கள் எடுத்துரைக்காத கைக்கிளை, பெருந்திணை, மடலேறுதல் ஆகியவை எதில் மட்டுமே உள்ளன?

A) நற்றிணை

B) குறுந்தொகை

C) பரிபாடல்

D) கலித்தொகை

E) விடை தெரியவில்லை

**158)** சத்யவாணி முத்து அம்மையார் நினைவாக வழங்கப்படும் உதவி என்ன மற்றும் அதன் பயனாளிகள் யார்?

A) திருமண நிதி உதவி, ஆதரவற்ற பெண்கள்

B) திருமண நிதி உதவி, ஆதரவற்ற கைம்பெண்கள்

C) இலவச தையல் இயந்திரம், ஆதரவற்ற பெண்கள்

D) இலவச தையல் இயந்திரம், ஆதரவற்ற கைம்பெண்கள்

E) விடை தெரியவில்லை

**159)** தமிழக முதலமைச்சருக்கு ஆலோசனை வழங்க அமைக்கப்பட்டுள்ள ஐவர் குழுவில் இடம்பெற்றிருக்கும் முன்னாள் ரிசர்வ் வங்கி கவர்னர் யார்?

A) உர்ஜித் பட்டேல்

B) Y. வேணுகோபால் ரெட்டி

C) டி. சுப்பாராவ்

D) ரகுராம் ராஜன்

E) விடை தெரியவில்லை

**160)** பின்வரும் எந்த நதி கிழக்கிலிருந்து மேற்குநோக்கிப் பாய்கிறது?

A) கோதாவரி

B) தாமிரபரணி

C) மகாநதி

D) முல்லைப் பெரியாறு

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**161)** தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் சுமார் மூன்றில் இருபங்கு பரவியுள்ளதும், மத்திய மாவட்டங்களில் காணப்படுவதுமான மண் வகை எது?

A) சரளை மண்

B) உவர் மண்

C) இவையிரண்டும்

D) செம்மண்

E) விடை தெரியவில்லை

**162)** இந்தியாவில் அதிக மழை பொழியும் பாலைவனம் என்றழைக்கப்படும் பகுதி?

A) சிரபூஞ்சி

B) சின்னக்கல்லார்

C) மௌசின்ராம்

D) ஜெய்சால்மர்

E) விடை தெரியவில்லை

**163)** இந்தியாவின் மிகப்பெரிய உவர்நீர் ஏரி எது?

A) புலிகாட் ஏரி

B) கொல்லேரு ஏரி

C) புஷ்கர் ஏரி

D) சாம்பார் ஏரி

E) விடை தெரியவில்லை

**164)** இரயில்வே துறையின் முக்கிய சாதனைகளில் ஒன்றான கொங்கன் இரயில்வே எந்த ஆண்டு அமைக்கப்பட்டது?

A) 1996

B) 1986

C) 1988

D) 1998

E) விடை தெரியவில்லை

**165)** வடகாவிரி வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ள இடம்?

A) தர்மபுரி

B) தூத்துக்குடி

C) கோயம்புத்தூர்

D) திருநெல்வேலி

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**166)** கருப்பை சீராக சுருங்குவதற்கு காரணமான ஹார்மோன் எது?

A) ரிலாக்சின்

B) ஆக்சிடோசின்

C) தைமோசின்

D) பாராதார்மோன்

E) விடை தெரியவில்லை

**167)** தாது உப்புக்களையும், அவைகளின் குறைபாட்டால் வரும் நோய்களையும் பொருத்துக:

(i) கால்சியம் - 1. ஆஸ்டியோமலேசியா

(ii) பாஸ்பரஸ் - 2. கிரிட்டினிசம்

(iii) அயோடின் - 3. இரத்தசோகை

(iv) இரும்புச்சத்து - 4. ரிக்கெட்ஸ்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 3 | 1 | 4 | 2 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 4 | 1 | 3 | 2 |

E) விடை தெரியவில்லை

**168)** ஒளியின் எந்த நிறம் கண்ணாடி வழியாக குறைந்த வேகத்தில் செல்லும்?

A) ஊதா

B) நீலம்

C) சிவப்பு

D) பச்சை

E) விடை தெரியவில்லை

**169)** கீழ்கண்டவற்றுள் கிழக்கிலிருந்து மேற்காக சுற்றும் கோள் எது?

A) பூமி B) வியாழன் C) செவ்வாய் D) வெள்ளி

E) விடை தெரியவில்லை

**170)** மனிதர்களின் நரம்புமண்டலத்தைத் தாக்கும் நோயான "மினமேட்டா", பின்வரும் எதன் மாசினால் உண்டாகிறது?

A) ஆர்சனிக்

B) தாமிரம்

C) பாதரசம்

D) அலுமினியம்

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**171)** யானைக்கால் நோயை ஏற்படுத்தும் உயிரி?

A) டிரிப்பனசோமா

B) உச்சரீரியா பாங்க்ரப்டி

C) அஸ்காரிஸ் லும்பிரிகாய்ட்ஸ்

D) பிளாஸ்மோடியம் வைவாக்ஸ்

E) விடை தெரியவில்லை

**172)** "The Little Book of Encouragement" என்ற நூலை எழுதியவர்?

A) லீ குவான் யூ

B) ஜிங்பிங்

C) விளாடிமீர் புடின்

D) தலாய் லாமா

E) விடை தெரியவில்லை

**173)** நிதி ஆயோக் வெளியிட்ட 2021 - ஏற்றுமதிக்கான தயார்நிலைக் குறியீட்டில் தேசிய அளவில் தமிழகம் வகிக்கும் இடம்?

A) முதலிடம்

B) இரண்டாமிடம்

C) மூன்றாமிடம்

D) நான்காமிடம்

E) விடை தெரியவில்லை

**174)** காணொலிக் காட்சி மூலமாக மக்களைத் தேடி மருத்துவம் என்ற திட்டம் முதன்முதலாக எந்த மாவட்டத்தில் தொடங்கப்பட்டது?

A) சென்னை

B) கோவை

C) மதுரை

D) திருவாரூர்

E) விடை தெரியவில்லை

**175)** விளையாட்டுத் துறைக்கான ராஜீவ் காந்தி கேல்ரத்னா விருது எவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்படும் என இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்?

A) தன்ராஜ் பிள்ளை கேல்ரத்னா விருது

B) துரோணாச்சாரியார் கேல்ரத்னா விருது

C) மேஜர் தயாள்சந்த் கேல்ரத்னா விருது

D) மில்கா சிங் கேல்ரத்னா விருது

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**176)** 12 மாணவர்களுக்கு புத்தகம் வழங்க 3000 ரூபாய் செலவாகும் எனில், 1250 ரூபாய்க்கு எத்தனை மாணவர்களுக்குச் சீருடை வழங்கலாம்?

A) 5
B) 7
C) 6
D) 4
E) விடை தெரியவில்லை

**177)** ரூ. 1600 க்கு 2 ஆண்டுகள் நான்கு மாதத்தில் தனிவட்டியாக ரூ.252 கிடைக்கிறது எனில் தனிவட்டி விகிதம் எவ்வளவு?

A) 6.25 %
B) 6.10 %
C) 6.45 %
D) 6.75 %
E) விடை தெரியவில்லை

**178)** 7 குருவிகள் 7 கூடுகளை 7 நாட்களில் செய்தால், 1 குருவி 1 கூட்டினை எத்தனை நாளில் செய்யும்?

A) 1
B) 7
C) 7/2
D) 49
E) விடை தெரியவில்லை

**179)** ஒரு எண்ணானது 13ஆல் வகுக்கப்படும்போது மீதி 11 கிடைக்கிறது. அதே எண்ணை 17 ஆல் வகுக்கும்போது மீதி 9 கிடைக்கிறது எனில் அந்த எண் எது?

A) 469
B) 309
C) 359
D) 349
E) விடை தெரியவில்லை

**180)** A - இன் உயரமானது B இன் உயரத்தில் 25 சதவீதம் குறைவாக உள்ளது எனில் B இன் உயரம் A இன் உயரத்தில் எவ்வளவு சடஹவீதம் அதிகமாக உள்ளது?

A) 25 %
B) 45 %
C) 33.33 %
D) 50 %
E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**181)** ஒரு செவ்வகமானது 4 செவ்வகங்களாக வெட்டி எடுக்கப்படுகிறது. இவற்றின் சுற்றளவுகள் முறையே 14செமீ, 22செமீ, 18செமீ, 26செமீ எனில் பெரிய செவ்வகத்தின் சுற்றளவைக் காண்க.

A) 10 செ.மீ

B) 20 செ.மீ

C) 40 செ.மீ

D) 80 செ.மீ

E) விடை தெரியவில்லை

**182)** 50 செ.மீ. உயரமுள்ள ஒரு மரமானது ஒவ்வொரு வருடமும் அதன் உயரத்தில் 1/5 மடங்கு வளருகிறது எனில் 2 வருடங்களுக்கு பிறகு அதன் உயரம்

A) 70 செ.மீ

B) 60 செ.மீ

C) 72 செ.மீ

D) 62 செ.மீ

E) விடை தெரியவில்லை

**183)** இரு எண்களின் கூடுதல் மற்றும் பெருக்கல்பலன் முறையே 60 மற்றும் 864 எனில், அந்த இரு எண்கள்.

A) 24, 36
B) 20, 40
C) 26, 34
D) 10, 50
E) விடை தெரியவில்லை

**184)** ஒரு பூங்காவில் A, B, C, D மற்றும் E எனும் மாணவர்கள் வட்ட வடிவில் அமர்ந்துள்ளனர் இவர்களில் A எனும் மாணவர் தென்மேற்கை பார்த்தும் D எனும் மாணவர் தென்கிழக்கை பார்த்தும் அமர்ந்துள்ளனர் B மற்றும் E எனும் மாணவர்கள் A மற்றும் D-க்கு நேர் எதிராக உள்ளனர் மேலும் C எனும் மாணவர் D மற்றும் B க்கு சமதொலைவில் இருப்பின் C எனும் மாணவர் எத்திசையை நோக்கி இருப்பார்?

A) மேற்கு

B) கிழக்கு

C) வடக்கு

D) தெற்கு

E) விடை தெரியவில்லை

**185)** மதிப்பு காண்க. (100-(99-(98-(97-(….-(2-1)))

A) 30
B) 40
C) 50
D) 60
E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**186)** பின்வரும் தொடர் வரிசையில் தவறான எண் என்ன? 623, 251, 543, 356

A) 251

B) 356

C) 543

D) 623

E) விடை தெரியவில்லை

**187)** 9x - y - 2 = 0, 2x + y - 9 = 0 என்ற நேர்க்கோடுகள் வெட்டும் புள்ளி

A) (-1,7)

B) (7,1)

C) (1,7)

D) (-1,-7)

E) விடை தெரியவில்லை

**188)** x - y = 6; xy=4; எனில் x^3 - y^3 ன் மதிப்பு காண்க

A) -288

B) -388

C) -268

D) -378

E) விடை தெரியவில்லை

**189)** 3 ஆண்டுகளுக்கு முன்பு கணவர், மனைவி, குழந்தை ஆகிய மூவரின் சராசரி வயது 27. அதே போல 5 ஆண்டுகளுக்கு முன்பு மனைவி மற்றும் குழந்தையின் சராசரி வயது 20 எனில், கணவரின் தற்போதைய வயது என்ன?

A) 42 வயது

B) 45 வயது

C) 50 வயது

D) 40 வயது

E) விடை தெரியவில்லை

**190)** இரண்டு ரயில்களின் வேகத்தின் விகிதம் 7:8. இரண்டாவது ரயில் 400 கி.மீ தூரத்தை 4 மணி நேரத்தில் கடக்கிறது எனில், முதல் ரயிலின் வேகம் என்ன?

A) 77.8 கி.மீ/மணி

B) 87.5 கி.மீ/மணி

C) 83.5 கி.மீ/மணி

D) 81.6 கி.மீ/மணி

E) விடை தெரியவில்லை

ETW ACADEMY

**191)** ஒரு தொட்டியை இரு குழாய்கள் தனித்தனியே முறையே 30 நிமிடங்கள், 40 நிமிடங்களில் நிரப்புகின்றன. மற்றொரு குழாய் 24 நிமிடங்களில் தொட்டியை காலி செய்யும். தொட்டி காலியாக இருந்து இம்மூன்று குழாய்களும் ஒரே சமயத்தில் திறந்துவிடப்பட்டால், அத்தொட்டி எத்தனை நிமிடங்களில் நிரம்பும்?

A) 45 நிமிடம்

B) 24 நிமிடம்

C) 1 மணி

D) 1.15 மணி

E) விடை தெரியவில்லை

**192)** ரூபாய் 414க்கு விற்கப்படும் ஒரு பொருளின் லாபம் 15 % எனில் அதன் வாங்கிய விலை என்ன?

A) 360

B) 350

C) 348

D) 334

E) விடை தெரியவில்லை

**193)** 28 லிட்டர் கலவையில் பாலும், நீரும் 5:2 என்ற விகித்தத்தில் உள்ளது. அக்கலவையுடன் 2 லிட்டர் நீர் சேர்த்தால் பால் மற்றும் நீரின் புதிய விகிதம் என்ன?

A) 2:1

B) 1:2

C) 2:3

D) 3:2

E) விடை தெரியவில்லை

**194)** கோளத்தின் வளைபரப்பும் கன அளவும் சமம் எனில் அதன் ஆரம்?

A) 3

B) 2

C) 1

D) 4

E) விடை தெரியவில்லை

**195)** 12 செமீ ஆரம் மற்றும் 24 செமீ உயரம் உடைய ஒரு உலோக கூம்பை உருக்கி தலா 2 செமீ ஆரம் கொண்ட கோளமாக உருவாக்கினால் எத்தனை கோளங்கள் கிடைக்கும்?

A) 108

B) 306

C) 52

D) 144

E) விடை தெரியவில்லை



ETW ACADEMY

**196)** ரமா என்பவர் ராணியை விட அதிக மதிப்பெண் பெற்றார். ராணி என்பவர் ரத்னாவை விட குறைவான மதிப்பெண் பெற்றார். ரத்னா என்பவர் ரமாவை விட அதிக மதிப்பெண் பெற்றார். ரம்யா என்பவர் ரமாவை விட அதிகமாகவும் ரத்னாவை விட குறைவாகவும் மதிப்பெண் பெற்றார். இவர்களில் யார் அதிக மதிப்பெண் பெற்றார்.

A) ரமா B) ராணி C) ரத்னா D) ரம்யா
E) விடை தெரியவில்லை

**197)** 10-ம் வகுப்பு மாணாக்கர்களின் 50 பேரின் சராசரி அகவை 15 ஆகும். 10 மாணாக்கர்கள் புதிதாக சேர்க்கப்பட்ட பின் சராசரி அகவை 0.5 ஆண்டு அதிகரித்தது. புதிதாக சேர்க்கப்பட்ட மாணாக்கர்களின் சராசரி அகவை.

A) 15 B) 10 C) 18 D) 14
E) விடை தெரியவில்லை

**198)** மூன்று எண்களில் 2வது எண்ணானது முதல் எண்ணில் பாதி 3வது எண் முதல் எண்ணைப் போல் மூன்று மடங்கு அவ்வெண்களின் சராசரி 27 எனில் அவ்வரிசையில் மிகச்சிறிய எண்

A) 8
B) 9
C) 10
D) 18
E) விடை தெரியவில்லை

**199)** பொருந்தாத எண்ணைக் கண்டுபிடி. 1, 144,16,25,49,81,121,36,62

A) 49
B) 121
C) 62
D) 81
E) விடை தெரியவில்லை

**200)** கீழே கொடுக்கப்பட்ட நான்கில் ஒன்று மட்டும் மற்றவற்றைச் சேர்ந்தது அல்ல. அது எது?

A) AIQ
B) BJR
C) CKS
D) DMT
E) விடை தெரியவில்லை

***

© ETW Academy